திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகரத்திற்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு மானியத்திட்டம், நபார்டு மற்றும் தேசிய சுகாதார இயக்கம் ஆகிய திட்டங்களின் கீழ் ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.17.59 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், பல்லடம் நகர்மன்றத்தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார், பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் செந்தில் கமலகண்ணன், பல்லடம் நகராட்சி ஆணையாளர் மனோகரன், நகராட்சி பொறியாளர் சுகுமார், நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார், கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ராஜசேகர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், துணை அமைப்பாளர்கள் ஈ.பாலசுப்பிரமணியன், செராஜசேகரன் உள்பட கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

சேலம் மத்திய மாவட்டத்தின் சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில். அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு பேசினார். மேலும் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. தொகுதி பார்வையாளர்கள் பார்.இளங்கோவன், இ.ஜி.சுகவனம், ஏ.ஆர்.விவேக், சா.ராஜசேகர், மேயர். ஆராமச்சந்திரன், தலைமைசெயற்குழுஉறுப்பினர்தாமரைக்கண்ணன், பொதுக்குழுஉறுப்பினர்கள்பெ.அசோகன், சா.சுப்பிரமணி, மாணவரணிதுணைச்செயலாளர் இரா. தமிழரசன், பி. மதிவாணன், மாநகர நிர்வாகிகள் எம்.எம். ஷெரீப், பி.கோமதி, பகுதி செயலாளர் சி.பிரகாஷ், எஸ். திருநாவுக்கரசு, மாணவர் அணி நிர்வாகிகள் கோகுல் காளிதாஸ், எம். மணிகண்டன் உட்பட பலர் கலந்துகொண்டு பேசினார்கள்.

### எத்தனை தடைகள் வந்தாலும் மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றும் அரசு!

# மீண்டும் மக்களின் ஆதரவுடன் கழக ஆட்சி அமையும்!

## கரூர் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

கரூர், ஜன. 28 -

எத்தனை தடைகள் வந்தாலும் அதனை உடைத்து மக்கள் நலத்திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. மீண்டும் கழக ஆட்சி அமைய மக்கள் முடிவு எடுத்து விட்டனர் என கரூரில் நடைபெற்ற மொழிப் போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசினார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்ட மாணவர் அணி சார்பில், மொழிப் போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கரூர் உழவர் சந்தை எதிரில் நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆர்ஜி. சரவண மூர்த்தி தலைமை வகித்தார். துணை அமைப்பாளர் டிடிகே. அருள்முருகன் வரவேற்புரை யாற்றினார். வழக்கறிஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், கழக சட்ட திட்ட திருத்த குழு செயலாளருமான இரா .கிரி ராஜன், கரூர் மாவட்ட கழகச் செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, தலைமைக் கழக பேச்சாளர்கள் கோபி வே.கும ணன், தீக்கனல் கருணாநிதி, எம்எல்ஏக்கள் இரா. மாணிக்கம், பி ஆர்.இளங்கோ, க.சிவ காமசுந்தரி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், வர்த்தக அணி துணை செயலாளர் பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி. விஜயகுமார், கரூர் மாநகரச் செயலாளர் எஸ். பி.கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன் சிறப்புரையாற்றினர்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசிய தாவது

தளபதி அவர்கள் இன்று பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். புதுமைப்பெண் திட்டம் அரசு அரசு உதவிபெறும் பள்ளியில் படித்த மாணவிகள் உயர்நிலைக் கல்வி செல்லுகின்ற பொழுது மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய மகத்தான திட்டத்தில் உயர்கல்வி பயிலுவோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

அதேபோல நான் முதல்வன் அற்புதமான திட்டத்தை முன்னெடுத்து இன்னும் இலட்சக்கணக்கான மாணவர்களும் மாணவிகளும் அந்த திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்பதற் காக அதை இன்னும் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக் கின்றார்கள். காலை உணவு திட்டம் வேலைக்கு செல்லுகின்ற தாய்மார்கள் தூய்மை பணியாளர் எல்லாம் காலையிலேயே எழுந்து கிளம்புகிறார்கள் என்று சொன்னால் களத்தில் கவலையோடு நின்று பின்னர் சென்று பணியாற்ற வேண்டும். அதனை மாற்றி தாய்மார்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மகளிருக்கு மாதம் தோறும் ரூ. 1000 உரிமை தொகை வழங்கும் திட்டம் வேலைக்கு செல்லும் பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் திட்டம் என

இப்படி ஒவ்வொரு திட்டமாக பார்த்து பார்த்து இந்த திட்டங்களோடு சேர்த்து இன்னும் பல திட்டங்களை குறிப்பாக நம்முடைய மாவட்டத்திற்கு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி வருகிறார்கள். சிறிய மாவட்டமாக இருந்தாலும் அரசு வேளாண்மை கல்லூரி அரவக்குறிச்சி, தரகம் பட்டியில் அரசு கலைக் கல்லூரி கள்நெரூர் உண்ணியூர் உயர் மட்ட பாலம்குளித்தலை அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ 40 கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்ட கட்டிடம்கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு கொண்டிருக்கிறார்கள். கரூர் மாநகராட்சியில் முடிவடைந்த பணிகளோடு கூடுதலாக சாலை அமைப்பதற்காக 20 கோடிகுடி நீர் திட்ட பணிகளை மேம்படுத்த ரூ 7.50 கோடி. புஞ்சை புகலூர் நகராட்சியாக தரம் உயர்வு பள்ளப்பட்டி பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது 476 கோடி ரூபாய் மதிப்பில் கரூரில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு விரைவில் நாம் அந்த பணிகளையும் தொடங்க இருக்கின்றோம். புதிய காவிரி குடிநீர் திட்டம் அதற்காக 113 கோடி நிதிகளை கொடுத்து பணிகள் தொடங்க இருக்கிறது.

கரூர் காமராஜ் மார்க்கெட் திறப்பு!

இருபது முப்பது ஆண்டுகளாக கரூர் காமராஜ் மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விரைவில் பிரம்மாண்டமான புதிய மார்கெட் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள். அதேபோல சாலைகள் விரிவாக்கம் வெங்கமேடு மேம்பாலத்தில் இருந்து அரசு காலனி வழியாக வாங்கல் மோகனூர் செல்ல 13 கோடி மதிப்பீட்டில் மிகப்பிரமாண்டமான ஒரு சாலை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கரூரில் இருந்து கோவை செல்வதற்கு நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி நடைபெறுகிறது.

திருவள்ளுவர் மைதானத்தில் ஒரு நூலகம் ரூ.6.90 கோடியில் நூலகம் பிரம்மாண்டமாக அந்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுக்கும் கோர்ட்டுக்கு போனார்கள். படிக்கிற குழந்தைகளுக்கு போட்டி தேர்வுக்கு தயாராகும் மாணவ மாணவியர்களுக்கு, போட்டி தேர்வுக்கு தயாராக கூடிய மாணவ மாணவிகள் தங்களுடைய வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி கொள்வதற்காக நூலகத்தை பயன்படுத்துகின்றார்கள். அந்த நூல கத்தினுடைய கட்டுமான பணிகளை கூட நிறுத்துவதற்கு நீதிம ன்றத்திற்கு சென்றார்கள். மக்களுக்கு பயன்படும் திட்டங்கள் என்ற சிந்தனை கூட இல்லாமல் தடை போடுகிறார்கள்.

ஆனால் நமது முதலமைச்சர் அவர்களோ மக்களுக்கு என்ன தேவை என சிந்தித்து சிந்தித்து திட்டங்களை செயல்படுத்துகிறார்கள். என்பதை மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எத்தனை தடைகளை போட்டாலும் அவற்றையெல்லாம் உடைத்து மக்கள் நலத் திட்டங்களை இந்த திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றி வருகிறது.

உழைக்கும் மகளிருக்கு கரூரில் புதிய தங்கும் விடுதி தரகம்பட்டி அரசு கலைக் கல்லூரிக்கு 12 கோடி ரூபாய் மதிப் பிலே புதிய கட்டிடம் மக்கள் நலதிட்டங்கள் செயல்படுத்தப் பட்டு கொண்டு இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் மன உறுதியோடு இருக்கிறார்கள். நான் ஒரு சில கேள்விகளை மட்டும் கேட்க விரும்புகிறேன். உங்களுடைய ஆட்சியில் இந்த ஊருக்கு என்ன செய்தீர்கள்? ஏதாவது ஒரு திட்டத்தை சொல்லுங்கள். ஒரு வேலையும் நடக்கவில்லை வெறும் வாய் மட்டும் தான். நாலைந்து முறை எம் எல் ஏ ஆக இருந்தவர்கள் கூட இந்த பந்தாவுடன் இல்லை. களத்திற்கு நாங்கள் ரெடி. வாருங்கள் சந்திப்போம் களத்தில். எங்களது தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் 200 இல் வெற்றி என்று.

**நான்கு தொகுதிகளையும் வெல்வோம்!**

கரூர் மாவட்டத்திலும் நான்கு தொகுதிகளையும் வெல்வோம். கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எங்களை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தலைவருடைய திட்டங்களை துணை முதலமைச்சர் அவர்களுடைய எண்ணங்களை மக்களிடம் எடுத்துச் சொல்வோம். வரலாற்றுச் சாதனையை உருவாக்குவோம். இந்த வீர வணக்கம் நாளில் உறுதி ஏற்போம். அ.தி.மு.க. புளி மூட்டைகள் பொய்யை இனியாவது யோசித்துச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் வி செந்தில்பாலாஜி பேசினார்.

மாவட்ட கழக நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பிவி. பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப .ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம்.துரைராஜ், சாலைசுப்பிரமணி, என்.செல்வராஜ், மாநகரக் கழக செயலாளர் எஸ்பி.கனகராஜ், வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர் எஸ் .ராஜா, மத்திய மேற்கு பகுதி செயலாளர் ஆர் ஜோதிபாசு, மத்திய கழக பொறுப்பாளர் விஜிஎஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இ. ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவி ராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ். சுதாகர், என். மணிகண்டன், த.கார்த்திக், சி. வளர்மதி, பி.முத்துக்குமாரசாமி, வி.கே. வேலுசாமி, எல். கரிகாலன், ப.தியாகராஜன், சி. கதிரவன், புகழூர் நகர கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் அ.குண சேகரன், பள்ளப்பட்டி நகரக் கழக பொறுப்பாளர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என். எஸ் ஆறுமுகம், வி .கருப் பண்ணன், விகேடி ராஜ் கண்ணு, எஸ்டேட் வேலுச் சாமி, கே.சாமிநாதன், சி. கருப் பையா, பிபிசரவணன், இ. ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏகுமார், பேரூர் செயலாளர்கள் கே .அம்மையப்பன், கே. முரளி ராஜா, இ.ரவீந்திரன், ஆர்மோகன்ராஜ், எம்.சசிகுமார், எம் முத்து, சி தங்கராஜ், பிஎஸ். மணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஆர் செல்வம் ஜி.திவாகர், எஸ் பிரியங்கா, எம் பி. கார்த்திகேயன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கமேடு. சக்திவேல், அணி அமைப்பாளர்கள் ஜிம்.எம்சிவா, கே நந்தினி தேவி, கே தாசப்பிரகாஷ், ஏ. சுப்பிரமணியன், தென்னிலை பாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி. மோகனசுப்பு, பழ. அப்பாசாமி, எம்.ப்ரின்சி, சி. நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு. வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லுசாமி எஸ்மனோகர், எம்பிஎஸ்.சுரேஷ், பங்க் கேசுப் பிரமணி, விஆர். அண்ணா வேலு கலந்து கொண்டனர் . மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எம் பி.கார்த்திகேயன் நன்றி உரை கூறினார்.

பொள்ளாச்சியில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. கழக சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமை வகித்தார். கழக தீர்மான குழு உறுப்பினர் ஜி.ஏ.அதிபதி, நகர மன்ற துணைத் தலைவர் எஸ்.கௌதமன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஏ.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் வரவேற்றார். நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் மயூரா சுப்பிரமணியம் , தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.க.முத்து, எம்.அமுதபாரதி, பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன், அய்யம்பாளையராசு, பாத்திமா அக்பர், மருதராஜ், ஜே.பி.ஆர் பாஸ்கர், செந்தில், ஈகா பொன்னுச்சாமி, திருமலை ராஜா, சித்ரகலா, கராத்தே ராஜா, மாணிக்கராஜ், வழக்கறிஞர் வி பி கிரி, அரவிந்த் வசந்த்ராம், சதீஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்ட நிர்வாகம் – பின்னல் புக் டிரஸ்ட் இணைந்து நடத்தும்

# 21வது திருப்பூர் புத்தகத் திருவிழா!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர்!

திருப்பூர், ஜன. 28 -

திருப்பூர்மாவட்டநிர்வாகம் மற்றும் பின்னல் புக் டிரஸ்ட் இணைந்துநடத்தும் 21வதுதிருப்பூர்புத்தகத்திருவிழாவினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்த்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழுஉறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்து,புத்தகஅரங்குகளை பார்வையிட்டனர்.

திருப்பூர் மாநகராட்சி, வேலன் ஹோட்டல் வளாகத்தில் 23.01.2025 வியாழக் கிழமை அன்று திருப்பூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் பின்னல் புக் டிரஸ்ட் இணைந்து நடத்தும் 21வது திருப்பூர் புத்தகத் திருவிழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர்தெற்குமாவட்டச்செயலாளர்,மாநகராட்சி4ம்மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர்ந.தினேஷ்குமார்ஆகியோர்முன்னிலையில்தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைஅமைச்சர், கழகஉயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறைஅமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்து,புத்தகஅரங்குகளை பார்வையிட்டனர்.

அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் தெரிவித்ததாவது :தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள்தமிழ்நாடுஅரசு மாவட்டந்தோறும்புத்தகக் கண்காட்சிகளை நடத்தும் என்றுசட்டமன்றத்தில்அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் திருப்பூர் புத்தகத் திருவிழா தமிழ்நாடு அரசு, திருப்பூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் பின்னல் புக் டிரஸ்ட் இணைந்து, 21வது திருப்பூர் புத்தகத் திருவிழா இன்றுமுதல்தொடங்கிபிப் ரவரி 02ம் தேதி வரை பத்து நாட்கள் திருப்பூர் காங்கேயம் ரோடு வேலன் ஹோட்டல்வளாகத்தில்நடைபெற வுள்ளது. தினமும் காலை 11.00 மணிக்கு புத்தகக் கண்காட்சிதொடங்கிஇரவு9.30 மணி வரை நடைபெறவுள்ளது. அனைவருக்கும் அனுமதி இலவசம். திருப்பூர் மாவட்டத்தில்தொழில்மட்டுமல்லபடிப்பிலும்மாணவர்கள் பொது தேர்வில் கடந்த ஆண்டு மாநில அளவில் முதலிடம்பெற்றுஇருக்கின்றார்கள். அதேபோல பாட புத்தகங்களை படிக்க படிக்க படிப்படியாக வெளி உலகத்தை பற்றியும் தெரிந்து கொள்ளவார்கள்.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாசிப்பு பழக்கத்தை அதிகப் படுத்தவேண்டும்என்றுதான் பள்ளிக்கல்விதுறையின்சார்பில் அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

முத்தமிழறிஞர்கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுஅண்ணாநூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னையில் பல லட்சம்புத்தகங்கள்இருக்கக் கூடிய ஆராய்ச்சி படிப்பு, குரூப்1 எழுதக்கூடிய மாணவர்கள் மற்றும் யுபிஎஸ்சி தேர்வு எழுதக்கூடியவர்கள் மாணவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா முன்னிட்டு மதுரையில் ஒரு நூலகத்தை திறந்து இருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு நூலகம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப் பட்டுபணிகள்நடைபெற்று வருகிறது. திருச்சி போன்ற பகுதிகளும் இத்திட்டம் துவங்கப்படும். மேலும், நூலகத்துறையும் மேம்படுத்தப்பட்டுவருகிறது.கிராமங்களுக்கு புத்தகங்கள் போய்சேரவேண்டும்என்ற நோக்கத்தில் நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பார்க்க வரக்கூடியவர்கள் புத்தகம் கொண்டுவரும்பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு வகையில் பல்வேறு சூழ்நிலையில் புத்தகங்கள் வாசிக்கின்ற பழக்கத்தைஏற்படுத்திவருகிறார்கள். சின்ன சின்ன கிராமங்களில் இருந்து எழுதியபுத்தகங்கள்தான்சாகித்திய அகடமி விருதுவரை பெற்று இருக்கின்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் புத்தகங்களை அதிகமாக எழுதியவர். கத்தியை தீட்டாதேநமதுபுத்தியைதீட்டு என்கிறவகையில்தான்சுருக்கமாக சொல்லி தமிழ் சான்றோர்களுக்குவசிக்கும்பழக்கத்தை ஏற்படுத்தினார்கள். தந்தைபெரியாரும்,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் அதற்கான முக்கியத்துவத்தைதந்துள்ளார்கள்.இப்படி பல்வேறு சூழ்நிலை இதற்கான முக்கியத்துவம் வந்து கொண்டிருக்கிறது.

சிறியவர் முதல் பெரியவர்வரைஅனைத்துவயதினருக்கும் ஏற்ற வகையில் தேவையான புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன. புத்தகக் கண்காட்சியில் பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம்,இசைநிகழ்ச்சி போன்றவையும்நடைபெறவுள்ளது. திருப்பூர் புத்தக திருவிழாவில்இலட்சகணக்கான தலைப்புகளில் இடம் பெறவுள்ள புத்தகங்களை வாசித்து பொது அறிவுத்திறனை மேம்படுத்திட ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.மாணவர்செல்வங்கள் புத்தகங்கள் வசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் அதற்கென்று நேரத்தை ஒதுக்க வேண்டும்என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகராட்சிதுணைமேயர்ரா.பால சுப்பிரமணியம்,மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, திருப்பூர் 2ம் மண்டலத்தலைவர் தம்பி ஆர். கோவிந்தராஜ்,திருப்பூர்வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், பின்னல் புக்டிரஸ்ட் தலைவர் இரா. ஈஸ்வரன், மாவட்ட நூலக அலுவலர் கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர் மு. நாச்சிமுத்து,மாவட்டஇளைஞர் அணி அமைப்பாளர் ஈ. தங்கராஜ், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இரா. மணி, நல்லூர் அவைத்தலைவர்சுப்பிரமணியம், வட்டக் கழகசெயலாளர்பூண்டுஅலி, மாவட்ட முன்னாள் பொருளாளர்ரத்தினசாமி,பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் மு.சிவபாலன், சாமளாபுரம் பேரூராட்சி தலைவர் விநாயகாபழனிச்சாமி,முன்னாள் செயலாளர் ஜியாவுள்ஹக் உள்படமாமன்றஉறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பின்னல் புக்டிரஸ்ட் நிர்வாகிகள், துறை சார்ந்த அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள்மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் வாழப்பாடியில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாணவரணி அமைப்பாளர் முனைவர். அ. சீனிவாசன் அப்பாதுரை தலைமை தாங்கினார் . வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு சிறப்பு அமைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கழகச் செய்தி தொடர்பாளர் பேராசிரியர்.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், தலைமை கழக பேச்சாளர் கோதை மதிவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் க.சுரேஷ் குமார், கு.சின்னதுரை, மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் மலர்விழி ராஜா, தமிழ்செல்வன், மனோகரன், சங்கர், கோபால், ரேகா பிரியதர்ஷினி, சோமசுந்தரம், முத்துலிங்கம்,ராஜா, சந்திரமோகன், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், விஜயகுமார், ரத்திவேல், ராஜேந்திரன், மாதேஸ்வரன், மூர்த்தி தங்க மருதமுத்து, சிவராமன், டாக்டர் செழியன், மணி, அழகு வேல், சித்தார்த்தன், பாலமுருகன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல்முருகன், மற்றும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் பேரூர் செயலாளர் செல்வம் நன்றி கூறினார்.